# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

மதுரை பதிப்பு • புதன், ஜூலை 31, 2024

R.Dis.No 521/18 Vol.7 No.212

• அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி •




↑ இஎஸ்ஐசியின் மதுரை துணை மண்டல இயக்குநர் மீனாட்சிசுந்தரம் தொழிலாளியிடம் குறை கேட்டார்.

## இஎஸ்ஐசி– யின் சிறப்பு குறை தீர்க்கும் முகாம்

• **மதுரை:** மதுரையில் இஎஸ்ஐசியின் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெற்றது.

மதுரை தத்தனேரி இஎஸ்ஐசி கிளை அலுவலகத்தில் 'கூட்டாக தொழிலாளர்களை சென்றடைதல்' மற்றும் வருங்கால வைப்புநிதி உங்கள் அருகில் 2.0 என்ற குறை தீர்க்கும் கூட்டம் நடந்தது.

இஎஸ்ஐசி மதுரை துணை மண்டலத்தின் துணை இயக்குநர் (பொறுப்பு) ஆர்.மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்தார். முகாமில் மதுரை மண்டல வருங்கால வைப்பு நிதி நிறுவன ஆணையர் பி. சுப்பிரமணி, உதவி ஆணையர் எம்எஸ். சுரேஷ், இஎஸ்ஐசி துணை இயக்குநர் எஸ். விஜயன், அமலாக்க அலுவலர் ஹேமமாலினி ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்கள் முகாமில் பங்கேற்றவர்களிடம் குறைகளை கேட்டறிந்து, தேவையான உத்தரவுகளை பிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ஜூலையில் பணி ஓய்வுபெறும் தொழிலாளி ஒருவருக்கு அதற்கான ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டது. தத்தனேரி இஎஸ்ஐசி கிளையின் அலுவலக மேலாளர் ஜெயஸ்ரீ ஏற்பாடுகளை செய்திருந்தார்.

மதுரை மண்டலத்துக்கு உட்பட்ட சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை மாவட்டத்திலும் இந்த சிறப்பு முகாம் நடந்தது.